# மாமா சாமியார்கள்

வெளிநாட்டு வெள்ளைக்காரர்கள் மற்றும் சில இந்தியர்கள் மிக எளிதாக வெவ்வேறுவிதமான பல புதுதினுசு பெண்களுடன் உல்லாசம் அனுபவிக்க இந்திய சாமியார்கள் சிலர் ஆடம்பரமான ஆசிரமங்கள் நடத்தி வருகின்றனர். இங்கு ஆன்மீகத்தோடு பெண்மீகமும் நடக்கிறது. இந்தவித மாமா வேலைகளோடு தியானம், யோகம், மூச்சுப்பயிற்சி போன்றவைகளை அவர்களுக்கு சலாம் போட்டு அளித்து அவர்களை சற்று வலிமையாக்கி களிப்பூட்டிக் கொண்டிருக்கின்றனர். வெள்ளைக்காரனுங்க எங்கே, எதை, எப்பொழுது, எப்படி, யாரிடம் பெற்றுக்கொள்ளலாம் என்பதில் மிக சாதுரியமானக் கில்லாடிகள். அதற்கு ஏற்ப நடிக்க, நடக்கத் தெரிந்தவர்கள். இதற்கு நிறையப் பணம், பெயர், விளம்பரம், புகழ், செல்வாக்கு, வெளிநாட்டு வாழ்க்கை, ஆடம்பரம் கிடைத்து அதன் மகிழ்ச்சியில் சில சாமியார்கள், ஜெபக்காரர்கள் திளைத்துக் கொண்டு உல்லாச வாழ்க்கை வாழ்ந்து வருகின்றனர். எனவே இவர்கள் லோக்கல் கேடி சாமியார்களை விட மோசமானவர்கள். இவர்கள் சாமான்ய மனிதர்களிடமிருந்து வேறுபடுத்திக்கொள்ள வித்தியாசமானத் தனி வேடத்தில் தோன்றுகின்றனர்.

அவர்கள் சிலரின் அந்தரங்க ரகசியங்கள் சில அவ்வப்போது வெளிவருவதுண்டு. உள்ளே எத்தனை ஆயிரம் ரகசியங்களோ! நல்ல சாமியார்கள், போதகர்கள் வருந்த வேண்டாம்; அவர்கள் நிச்சயமாக மதிப்பிற்குரியவர்கள்.

மனிதர்களில் கணிசமான பகுதியினர் தங்களை எப்படியாவது வெளிப்பாடு செய்து கொள்ள வேண்டுமென்பதிலும், வெவ்வேறு எதிர்பாலினரிடம் காம சுகத்திற்காக ஏங்குபவர்களாகவும் இருக்கின்றனர். இதற்கு சிலர் தங்களை எப்படியாவது முன்னிலை படுத்திக்கொள்ளப் பலவிதமான வேலை நடக்கிறது. இதற்கு அரசியல், சேவை போன்ற இயக்க போர்வைகள் போக இந்தமாதிரி சாமியார்களை இயக்கங்கள் நன்கு உதவுகின்றன. இதன் மூலம் சிலருக்கு உத்தியோகம், வியாபாரம், தொழில், நல்ல சம்பாத்தியம் கிடைக்கிறது.

பலர் எல்லாம் ஆடி முடித்தபின் மெல்ல மெல்ல நல்லவர்களாக மாறிக் கொள்கின்றனர். எல்லாம் ஆடி ஓரளவுக்கு ஓய்ந்து போன வயதான சிலருக்கு இந்த ஆசிரமங்கள் மன அடைக்கலம் தருகின்றன. நன்றாக ஆட்டம் போட்டுவிட்டு அங்கே மவுசு குறைந்து போன வெள்ளைக்காரர்களுக்கு இங்கே மவுசு அதிகம். இதற்கு நம் சாமியார்கள், ஜெபமடத்தினர் உதவுகின்றனர்.

ஆனால் இவர்களையும், எவர்களையும்விட கோடான கோடி சாமான்ய மனிதர்களுக்கு மிக அவசியமானதான உயிர், வாழ்க்கை, குடும்பம் நடத்த நல்ல ஊதியம், பொருள் நிரந்தரமாகக் கொடுக்கும் நிலையிலுள்ளவர்களே அவசியமானவர்கள், போற்றுதலுக்குரியவர்கள், வணக்கத்திற்குரியவர்கள்!

இவர்களே உலகம், நாடு மற்றும் மனித வாழ்க்கை தரத்தை உயர்த்தி ஓரளவுக்காவது மகிழ்ச்சி உண்டாகக் காரணமானவர்கள். இவர்கள் தங்களோடு மற்றும் பல எண்ணற்ற குடும்பங்களுக்காகவும் உழைத்துக் கொண்டிருக்கும் நியாயமான நல்ல தொழிலதிபர்கள்! மற்றும் தொழிலாளர்கள்!